# ரோமர் 7இன் மனிதன் யார்?



## மனன வசனம்

**இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ் செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப் பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப் பட்டிருக்கிறோம். ரோமர் 7:6.**

## ஆராய்ச்சிக்கு

**ரோமர் 7.**

நவம்பர் 18 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

வேதாகமத்தில் மிகுந்த சர்ச்சைக்கு ஆளான சில அதிகாரங்களில் ரோமர் 7உம் ஒன்று. எஸ்டிஏ வேதாமக விளக்கவுரையில் இந்தப் பிரச்சனைபற்றி பின்வருமாறு சொல்லப்படுகிறது: ''ரோமர் நிருபம் முழுவதிலும் அதிகம் விவாதிக்கப்பட்ட விஷயங்களில் (ரோமர் 7:14-25) வசனங்களுக்கான அர்த்தமும் ஒன்றாகும். இவ்வளவு பயங்கரமான ஒழுக்கப் போராட்டமானது பவுலின் சொந்த வாழ்க்கையைப் பற்றியதா? அவருடைய சொந்த அனுபவமென்றால், அது அவருடைய மனமாற்றத்திற்கு முன்னானதா, அல்லது பின்னானதா? இந்தக் கேள்விகள் எழும்புகின்றன. ''பாவத்தோடான தன் தனிப்பட்ட போராட்டத்தையே பவுல் பேசுகிறார் என்பது அவருடைய வார்த்தைகளிலிருந்து தெளிவாகத் தெரிகிறது (ஒப்பிடவும். [ரோமர் 7:7-11];...). [*EGW, SC, p 19*; *EGW, 3T, p 475.*] தேவனுடைய பரிசுத்த பிரமாணத்தின் ஆவிக்குரிய கோரிக்கைகளால் உணர்வடைந்து, போராட்டத்திற்குள்ளாகும் ஒவ்வோர் ஆத்துமாவின் நிலையையும் அவர் விளக்குகிறார் என்பதும் உண்மையாகும்.'' - *6SDABC, p 553.*

ரோமர் 7இல் பவுலின் மனமாற்றத்திற்கு முன்னான அனுபவம் சொல்லப்படுகிறதா? அல்லது பின்னான அனுபவம் சொல்லப்படுகிறதா, என்று விவாதிக்கிறார்கள். எது எப்படியானாலும், இயேசுவின் நீதியே நம்மைமூடுகிறது; அவருடைய நீதியால் தேவனுக்குமுன் நாம் பூரணர்களாக நிற்கிறோம்; நம்மைப் பரிசுத்தப் படுத்தவும், பாவத்தின்மேல் நமக்கு வெற்றிதரவும், 'தமது குமாரனுடைய சாயலுக்கு' ஒப்பாக நம்மை மாற்றவும் அவர் வாக்களித்திருக்கிறார். ரோமர் 8:29. 'நித்திய சுவிசேஷத்தை ''சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும்' அறிவிப்பதற்கு நாம் அறிந்து, அனுபவித்திருக்க வேண்டிய மிகமுக்கிய மான விஷயங்கள் இவை. வெளி 14:6.

2017, நவம்பர் 25 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்கள்

***நியாயப்பிரமாணத்தோடு நமக்குள்ள உறவை விவரிக்க ரோமர் 7:1-6இல் எதை எடுத்துக்காட்டாக வைத்து பவுல் பேசுகிறார்? அதன்மூலம் அவர் வலியுறுத்தும் கருத்து என்ன?***

---

ரோமர் 7:1-6இலுள்ள பவுலின் எடுத்துக்காட்டைப் புரிந்துகொள்வது சற்று சிக்கல்தான்; கவனமாக ஆராய்ந்தால் அவர் சொல்லவரும் கருத்து புரிகிறது.

சீனாயில் கொடுக்கப்பட்ட ஆராதனை முறையை மனதில் வைத்தே பவுல் அந்த நிருபத்தை எழுதுகிறார்; நியாயப்பிரமாணம் என்று அதைத்தான் அவர் குறிப்பிடுகிறார். தேவன் ஏற்படுத்திக் கொடுத்த அந்த ஒழுங்கானது மேசியாவின் வருகையோடு முடியவிருந்ததை யூதர்களால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. தங்கள் வாழ்க்கையில் ஒன்றாகக் கலந்துவிட்டிருந்த அந்த முறைமையை யூத விசுவாசிகளால் விடவே முடியவில்லை; அதுகுறித்தே பவுல் பேசுகிறார்.

ஒரு பெண் ஒருவனைத் திருமணம்செய்கிறாள். அவன் உயிரோடிருக்கும் வரையிலும் சட்டப்படி அவள் அவனுக்கு உண்மையாக இருக்கவேண்டும். இந்தச் சமயத்தில் அவள் இன்னொருவனுக்கு மனைவியாக முடியாது. ஆனால் அவன் மரித்தால், அவனோடு அவளைக் கட்டியிருக்கும் சட்டத்திலிருந்து அவள் விடுபடுகிறாள். ரோமர் 7:3.

***விவாகப் பிரமாணத்தை பவுல் எவ்வாறு யூத மார்க்க ஒழுங்கோடு ஒப்பிட்டுப் பேசுகிறார்? ரோமர் 7:4,5.***

ஒரு பெண்ணின் கணவன் மரித்ததும், கணவனுடைய நிபந்தனையிலிருந்து அவள் விடுபடுவதுபோல, மாம்சத்தில் வாழ்ந்த பழைய வாழ்க்கைக்கு இயேசு கிறிஸ்துவின்மூலம் மரிக்கும்போது, நியாயப்பிரமாண ஒழுங்குமுறையிலிருந்து யூதர்களுக்கு விடுதலைகிடைக்கிறது. ஆனால், அந்த ஒழுங்குமுறையை மேசியா நிறைவேற்றிய பிறகும் அதைக் கைக்கொள்ள யூதர்கள் விரும்பினார்கள்.

இப்போது யூதர்கள் 'மறுவிவாகம்' செய்யத் தடையில்லாதிருந்தது. உயிர்த்தெழுந்த மேசியாவை விவாகம்செய்யவும், அதன்மூலம் தேவனுக்கென்று கனிகொடுக்கவும் அவர்களுக்கு அழைப்பு கொடுக்கப்பட்டது. பழங்கால முறைமைகளிலிருந்து யூதர்களுக்கு விடுதலைகிடைத்திருந்ததை பவுல் இப்படி அவர்களுக்குத் தெரியப்படுத்தினார்.

பத்துக்கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதுபற்றி பவுலும் வேதாகமும் சொல்வதையெல்லாம் படித்தால், யூதர்கள் இனியும் பத்துக்கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டியதில்லை என்று பவுல் சொல்வதாக நினைக்கமுடியாது. ஒழுக்கப்பிரமாணம் ஒழிந்துபோயின என்று சொல்வதற்கு இந்த வசனத்தைப் பயன்படுத்துகிறவர்கள் உண்மையில் வேறு நோக்கத்திற்காகவே அப்படிச் சொல்கிறார்கள்; மற்ற கற்பனைகள் அல்ல, ஏழாம் நாள் ஓய்வுநாள் கற்பனை ஒழிந்துபோய்விட்டதாகச் சொல்வதற்காகவே அதைப் பயன்படுத்துகிறார்கள். நான்காம் கற்பனை ஒழிந்ததாக, மாற்றியமைக்கப்பட்டதாக, அல்லது இதற்குப் பதிலாக ஞாயிற்றுக்கிழமை கொடுக்கப்பட்டதாகச் சொல்வதற்கு ரோமர் 7:4,5ஐப் பயன்படுத்துகிறவர்கள் உண்மையில் அந்த வசனங்களின் அர்த்தத்தைப் புரட்டுகிறார்கள்.

சீனாயில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாண முறைமைகள் மொத்தத்தையும் பற்றிதான் பவுல் பேசுகிறார் என்றால், ரோமர் 7:7இல் பத்துக்கற்பனைகளில் ஒன்றை அவர் குறிப்பிடுகிறாரே? பத்துக்கற்பனைகள் ஒழிந்துபோனதாக பவுல் பேசவில்லை என்று நேற்று நாம் பார்த்தது பொய்யா?

இல்லை. சீனாயில் கொடுக்கப்பட்ட மொத்த முறைமையையும் நியாயப் பிரமாணம் என்று பவுல் குறிப்பிடுகிறார்; அதில் ஒழுக்கப்பிரமாணமும் அடங்கும். எனவே, பவுல் தன் கருத்துகளை உறுதிப்படுத்துவதற்கு, ஒழுக்கப்பிரமாணம் உட்பட எந்த யூத ஒழுங்குமுறையிலிருந்தும் அவர் சுட்டிக்காட்டலாம். ஆனாலும் கிறிஸ்துவின் மரணத்தின்போது ஒழிந்துபோன கட்டளைகளில் ஒழுக்கப் பிரமாணத்தைச் சேர்க்கமுடியாது; ஏனென்றால், இது சீனாய்க்கு முன்னரும் இருந்தது; கல்வாரிக்குப் பிறகும் இருக்கிறது.

***நியாயப்பிரமாணத்திற்கும் பாவத்திற்கும் உள்ள தொடர்புபற்றி ரோமர் 7:8-11இல் பவுல் சொல்வது என்ன?***

யூதர்களுக்கு தேவன் தம்மை வெளிப்படுத்தினார்; ஒழுக்க, சமுதாய, சடங்காச்சார, சுகாதார ரீதியான விஷயங்களில் எது தவறு, எது சரி என்பதை அவர்களுக்கு விளக்கினார். மீறுதலுக்கான தண்டனைகளையும் கூறியிருந்தார். தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்தை மீறுவதே பாவமாம்.

இச்சையை 'பாவம்' என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், அது பாவமென்று தனக்குத் தெரிந்திருக்காதென பவுல் கூறுகிறார். தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தம் தெரியாவிட்டால், எது பாவமென்றும் தெரியாது. தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தம் என்னவென்று உணர்த்தப்படும்போது, தான் பாவி என்பதையும், தான் ஆக்கினைக்கும் மரணத்திற்கும் ஆளாகியிருப்பதையும் ஒருவர் உணர்கிறார். இவ்வாறுதான் அவர் மரிக்கிறார்.

'நியாயப்பிரமாணத்தை' பெரிதாகப் போற்றிய யூதர்களுக்கு, கிறிஸ்துதான் நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலென வலியுறுத்த பவுல் முயல்கிறார். நியாயப்பிரமாணம் அவசியமென்றும், அதன் பயன் வரம்புக்குட்பட்டதென்றும் காட்டுகிறார். இரட்சிப்பின் அவசியத்தை வலியுறுத்தவே நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது; இரட்சிப்பை அடைவதற்கான வழிவகையாக அது கொடுக்கப்படவில்லை.

"அப்போஸ்தலனாகிய பவுல் தன் அனுபவத்தைச் சொல்லி, மன மாற்றத்தின்போது செய்யப்படவேண்டிய பணிகுறித்த ஒரு முக்கிய உண்மையை வலியுறுத்துகிறார். 'முன்னே நியாயப்பிரமாணமில்லாமல் ஜீவனுள்ளவனாய் இருந்தேன்' என்கிறார். அதாவது, ஆக்கினையை உணராதவராக இருந்தார். ஆனால் 'கற்பனை வந்தபோது', தேவனுடைய பிரமாணம் அவருடைய மனச்சாட்சியில் உணர்த்தப்பட்டபோது 'பாவம் உயிர்கொண்டது; நான் மரித்தவனானேன்.' தான் ஒரு பாவியென்றும், தேவனுடைய பிரமாணத்தால் ஆக்கினைக்குள்ளானதையும் கண்டார். நியாயப்பிரமாணம் அல்ல, பவுலே மரித்தார்." – *1SDABC, p 1076.*

நியாயப்பிரமாணத்தால் எவ்விதத்தில் 'மரித்திருக்கிறீர்கள்'? இயேசு உங்களுக்காக மரித்தது எவ்வாறு உங்களுக்குப் புதிய ஜீவனைக் கொடுத்திருக்கிறது?

## நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளது

**பவுல் இதுவரையிலும் சொல்லிவரும் விஷயத்தை வைத்து, *ரோமர் 7:12*ஐ நாம் எவ்வாறு புரிந்துகொள்ளலாம்?**

யூதர்கள் நியாயப்பிரமாணத்தை பெரிதாகப் போற்றினார்கள்; எனவே தன்னால் முடிந்த விதத்திலெல்லாம் பவுல் அதை மேன்மைப்படுத்துகிறார். நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட நோக்கம் நன்மையானதுதான்; ஆனால், நோக்கத்திற்கு மாறானதை அது செய்யமுடியாது; அதாவது பாவத்திலிருந்து நம்மை இரட்சிக்கமுடியாது. இயேசுதான் நம்மை இரட்சிக்கமுடியும்; யூத முறைமை முழுவதாலும், குறிப்பாக ஒழுக்கப்பிரமாணத்தாலும் இரட்சிப்பைத் தரமுடியாது. இயேசுவாலும், விசுவாசத்தால் நமக்கு அருளப்படும் அவருடைய நீதியாலும்மட்டுமே நாம் இரட்சிக்கப்படமுடியும்.

**தன்னுடைய 'மரித்த' நிலைக்கு பவுல் எதைக் குற்றஞ்சாட்டுகிறார்? எதைக் குற்றஞ்சாட்டவில்லை? இந்த வித்தியாசத்தை அறிவது ஏன் முக்கியமானது? *ரோமர் 7:13.***

ரோமர் 7:13இல் நியாயப்பிரமாணத்தை தன்னால் முடிந்தவரைக்கும் பவுல் மேன்மைப்படுத்துகிறார். தன்னுடைய பயங்கர பாவநிலைக்கு நியாயப்பிரமாணத்தை அல்ல, பாவத்தையே குற்றஞ்சாட்டுகிறார்; அதாவது, பாவமே 'சகலவித இச்சைகளையும்' நடப்பித்தது. ரோமர் 7:8. நியாயப்பிரமாணம் நன்மையானது; அது தேவன் நியமித்துள்ள ஒழுக்கத்தரம்; ஒரு பாவியாக பவுல் அதற்குமுன் ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டு நிற்கிறார்.

**பாவம் எவ்வாறு பவுலை ஒரு கொடிய பாவியாக்கியது? *ரோமர் 7:14,15.***

மாம்சத்துக்குரியவராயிருந்த பவுல் மாறுவதற்கு இயேசு கிறிஸ்து தேவை. இயேசு கிறிஸ்துவால்மட்டுமே ஆக்கினையை நீக்கமுடியும். ரோமர் 8:1. பாவ அடிமைத்தனத்திலிருந்து இயேசுவால்மட்டுமே விடுவிக்கமுடியும்.

'பாவத்துக் கீழாக' தான் விற்கப்பட்டதாக பவுல் கூறுகிறார். அவர் பாவத்திற்கு அடிமையாக இருந்தார். அவர் செய்ய விரும்பியதை அவரால் செய்ய முடியவில்லை. நன்மையான நியாயப்பிரமாணம் செய்யச் சொன்னதை செய்ய முயற்சித்தார்; ஆனால், பாவம் அவரைச் செய்யவிடவில்லை.

மேசியா தேவை என்பதை இதன்மூலம் யூதர்களுக்கு பவுல் காண்பிக்க நினைத்தார். கிருபையின்கீழ் மட்டுமே வெற்றி சாத்தியமென்று ஏற்கனவே அவர் சுட்டிக்காட்டியிருந்தார். ரோமர் 6:14. அதே கருத்தையே ரோமர் 7இலும் மீண்டும் வலியுறுத்துகிறார். 'நியாயப்பிரமாணத்திற்கு' கீழ் வாழ்வதென்றால், இரக்கமற்ற எஜமானான பாவத்திற்கு அடிமைப்பட்டிருப்பதாகும்.

பாவமானது மனிதர்களை அடிமையாக்குவதில் உங்களுடைய அனுபவம் என்ன? உங்கள் விருப்பத்திற்கு பாவத்தை இணங்கவைத்துவிடலாமென்று பாவத்தோடு விளையாட ஆரம்பித்து, பிறகு அது உங்களை ஒரு கொடிய எஜமானாக வேலைவாங்கியதை அனுபவித்திருக்கிறீர்களா? இயேசுவுக்கு உங்களை அர்ப்பணிப்பதும், அனுதினமும் சுயத்திற்கு மரிப்பதும் ஏன் அவசியமாக இருக்கிறது?

*'இப்படி நான் விரும்பாததைச் செய்கிறவனாயிருக்க, நியாயப்பிரமாணம் நல்ல தென்று ஒத்துக்கொள்ளுகிறேனே. ஆதலால் நான் அல்ல, எனக்குள் வாசமா யிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது.' ரோமர் 7:16,17.*

நியாயப்பிரமாணத்தை பரிசுத்த ஆவியானவர் ஒரு கண்ணாடிபோலப் பயன் படுத்தி, நியாயப்பிரமாணத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றாத ஒருவர் தேவ னைப் பிரியப்படுத்தத் தவறுவதை உணர்த்துகிறார். நியாயப்பிரமாண நிபந்தனை களை நிறைவேற்ற முயல்வதன்மூலம் நியாயப்பிரமாணம் நல்லதென்று அந்தப் பாவி காட்டுகிறார்.

***தான் சொன்ன என்னென்ன கருத்துகளை ரோமர் 7:18-20இல் பவுல் மீண்டும் வலியுறுத்துகிறார்?***

ஒருவருக்கு கிறிஸ்து தேவை என்பதை உணர்த்தும்படி, 'பழைய உடன்படிக் கைக்கு' ஒப்பான ஓர் அனுபவத்தின்மூலம் பரிசுத்த ஆவியானவர் அவரை வழி நடத்துகிறார். இஸ்ரவேலரின் அனுபவம்பற்றி எலன் ஒய்ட் பின்வருமாறு கூறு கிறார்: ''தங்கள் இருதயங்களின் பாவ நிலையையும், கிறிஸ்து இல்லாமல் தேவ னுடைய கற்பனையை தங்களால் கைக்கொள்ள இயலாது என்பதையும் மக்கள் உணரவில்லை; தேவனோடு உடனடியாக உடன்படிக்கை செய்துகொண்டார்கள். தேவையான நீதியை தாங்களே பெறமுடியுமெனநினைத்து, 'கர்த்தர் சொன்னபடி யெல்லாம் செய்து, கீழ்ப்படிந்து நடப்போம்' என்று சொன்னார்கள். யாத் 24:7. ஒரு சில வாரங்களுக்குள்ளாக தேவனோடிருந்த தங்கள் உடன்படிக்கையை மீறி, வார்ப்பிக்கப்பட்ட சொரூபத்தைத் தொழுதுகொண்டார்கள். உடன்படிக்கையை மீறினதால், அந்த உடன்படிக்கையின்மூலம் தேவனிடம் தயவைப் பெற்றுக்கொள் ளும் தகுதியை இழந்தார்கள்; இப்போது தங்களுடைய பாவ நிலையையும், தாங்கள் மன்னிக்கப்படவேண்டியதையும் உணர்ந்ததால், ஆபிரகாமின் உடன் படிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட இரட்சகர் தங்களுக்குத் தேவை என்கிற உணர்வை அடைந்தார்கள்.'' - *EGW, PP, p 371,372.*

கிறிஸ்துவுக்கு தங்களை அனுதினமும் அர்ப்பணிக்க மறுக்கும் கிறிஸ்தவர்கள் பாவத்தைச் சேவிக்கிறவர்களாக இருக்கிறார்கள்; அது மிகவும் அருவருப்பானது. ஆனாலும், தாங்கள் பரிசுத்தமாகுதலின் அனுபவத்திற்குள் இருப்பதாகவும், இன் னும் நீண்டதூரம் தாங்கள் பயணிக்க வேண்டியதிருப்பதாகவும் காரணம் கூறுகி றார்கள். எனவே, அறிந்த பாவங்களை கிறிஸ்துவிடம் சொல்லி, அவற்றிலிருந்து தங்களுக்கு வெற்றியைக் கேட்பதற்குப் பதிலாக, ரோமர் 7ம் அதிகாரத்தை தங் களுக்குச் சாதகமாக்குகிறார்கள்; நியாயமானதைச் செய்வது சாத்தியமல்லவென்று அது சொல்வதாக நினைக்கிறார்கள். பாவத்திற்கு அடிமைப்பட்ட நிலையில் சரி யானதைச் செய்வது சாத்தியமற்றதென்றும், இயேசு கிறிஸ்துவில் வெற்றி சாத்திய மென்றும் ரோமர் 7 கூறுகிறது.

பாவத்தின்மேலும், சுயத்தின்மேலும் கிறிஸ்து வாக்குரைத்திருக்கும் வெற்றியைப் பெற் றிருக்கிறீர்களா? இல்லையென்றால், காரணம் என்ன? என்னென்ன தவறான தீர்மானங் களை நீங்கள் செய்கிறீர்கள்?

## மரணத்திலிருந்து விடுதலையாகுதல்

***ரோமர் 7:21-23இல் சொல்லப்படும் போராட்டத்தை ஒரு கிறிஸ்தவராக எவ்வாறு உங்கள் வாழ்க்கையில் அனுபவித்திருக்கிறீர்கள்?***

---

தன் அவயவங்களில் உள்ள பிரமாணத்தை பாவப்பிரமாணத்திற்கு ஒப்பிட்டு இந்த வசனத்தில் பவுல் பேசுகிறார். மாம்சத்தினால் தான் பாவப்பிரமாணத்திற்கு ஊழியஞ்செய்ததாகக் கூறுகிறார். ரோமர் 7:25. பாவத்திற்கு ஊழியஞ்செய்வதும், அதன் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதும் மரணத்திற்கு சமமாகும். ரோமர் 7:10,11, 13. தன்னுடைய சரீரம் பாவத்திற்குக் கீழ்ப்படிவதால், அதை 'மரணசரீரம்' என்று அவர் சொல்வது மிகவும் சரியானதாகும்.

மனதின் பிரமாணம் என்பது தேவனுடைய பிரமாணமாகும்; அவருடைய சித்தத்தின் வெளிப்பாடாகும். பரிசுத்த ஆவியானவரின் உணர்த்துதலால், பவுல் இந்தப் பிரமாணத்தை ஏற்றுக்கொண்டார். அதற்குக் கீழ்ப்படிய அவருடைய மனது தீர்மானித்தது; ஆனால், அதற்கு அவர் முயற்சித்தபோது, அவரால் கீழ்ப் படிய முடியவில்லை; ஏனென்றால், அவருடைய சரீரம் பாவம்செய்ய விரும் பியது. இதே போராட்டம் யாருக்குதான் உண்டாகாமல் இல்லை? நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பது உங்களுடைய மனதுக்குத் தெரியும்; ஆனால் உங்களு டைய மாம்சமோ வேறொன்றின்மேல் நாட்டமாக இருக்கும்.

***நமக்கு நேரிடுகிற இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து நாம் எவ்வாறு விடுபடலாம்? ரோமர் 7:24,25.***

'நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலமாய் தேவனை ஸ்தோத்திரிக் கிறேன்' என்று முடிவாகச் சொல்லியபிறகும்கூட, தனக்கு எதிலிருந்து விடுதலை கிடைத்ததோ அந்த ஆத்தும போராட்டங்களை பவுல் மீண்டும் ஒருமுறை குறிப் பிடுகிறார். 'யார் என்னை விடுதலையாக்குவார்?' என்கிற ஏக்கம்தான் இப்படிச் சொல்ல வைப்பதாகக் கூறுகிறார்கள். மகிமையான விடுதலைகுறித்து சொல் வதற்குமுன் (ரோமர் 8), தான் முந்தைய வசனங்களில் சொன்னவற்றை பவுல் நினைவுப்படுத்துவதாகவும், பாவத்தின் ஆற்றல்களுக்கு எதிரான போராட்டத்தை மீண்டும் ஒருமுறை வலியுறுத்துவதாகவும் நம்புகிறார்கள்.

'கிறிஸ்து இல்லாமல் நான் தனியாக விடப்பட்டால்' என்பதையே 'நானே' என்று பவுல் குறிப்பிடுவதாக வேறு சிலர் கூறுகிறார்கள். ரோமர் 7:24,25 வசனங் களுக்கு எப்படி அர்த்தம் கூறினாலும், ஒரு கருத்துமட்டும் உறுதியானது; அதா வது, கிறிஸ்துவின்றி நாம் தனியாக விடப்பட்டால் பாவத்திற்கு எதிராக நாம் உதவி யற்றவர்களாக நிற்போம். கிறிஸ்து நம்மோடிருந்தால், அவருக்குள் ஒரு புதிய வாழ்க்கை கிடைக்கும்; சுயம் அவ்வப்போது தலைதூக்கினாலும்கூட அந்தப் புதிய வாழ்க்கையில் வெற்றியின் வாக்குறுதிகளை உரிமைகோரத் தீர்மானித்தால், அவற்றை நாம் சொந்தமாக்கலாம். உங்களுக்காக வேறு யாரும் சுவாசிக்கமுடி யாததுபோல, வேறு யாரும் இருமமுடியாததுபோல, வேறு யாரும் தும்ம முடி யாததுபோல உங்களுக்காக யாரும் கிறிஸ்துவிடம் அர்ப்பணிக்கமுடியாது. நீங் கள்தாம் அந்தத் தீர்மானத்தைச் செய்தாகவேண்டும். இயேசுவில் நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ள வெற்றிகளை அடைவதற்கு வேறு வழியே இல்லை.

"நியாயப்பிரமாணத்தை மீறிக்கொண்டே நாம் பாதுகாப்பையும் இளைப்பாறுதலையும் நீதிமானாக்கப்படுதலையும் பெறமுடியாது. தொடர்ந்து பாவம் செய்துகொண்டே யாரும் கிறிஸ்துவின் புண்ணியங்களைக் காட்டி தேவனுக்குமுன் பாவமற்றவர்களாகவும், சமாதானமாகவும் நிற்கலாமென நினைக்கக்கூடாது." – 1*ST, p 213.*

"பாவத்தை மன்னிக்கும் இரட்சகரின் மகத்தான மகிமையானது யூத ஒழுங்குமுறை முழுவதையும் முக்கியத்துவப்படுத்தியது என்று தன் சகோதரர்கள் கண்டுகொள்ள வேண்டுமென்று பவுல் விரும்புகிறார். கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்து, மனிதர்களின் பதிலாளியாக மரித்தபோது, நிழல்கள் நிஜமாகிவிட்டன என்பதையும் அவர்கள் அறிந்து கொள்ளவேண்டுமென்று அவர் விரும்பினார்.

"பாவபலியாக கிறிஸ்து சிலுவையில் மரித்தபிறகு, சடங்காச்சாரப் பிரமாணம் முக்கியமற்றதானது. அது ஒழுக்கப்பிரமாணத்தோடு சம்பந்தப்பட்டதால் மகிமையான தாகவும் இருந்தது. தேவனுடைய நியாயத்தையும் நீதியையும் அது வெளிப்படுத்தியது. ஒழிந்துபோகவிருந்த ஆராதனைமுறையின் ஊழியமே மகிமையானதாக இருந்திருக்கு மானால், நிஜ ஊழியமானது, அதாவது கிறிஸ்து வந்து, தம்மை நம்புகிற அனைவருக்கும் ஜீவனைக் கொடுக்கிற, தம்முடைய ஆவியை அருளின ஊழியமானது எவ்வளவு மகிமை யானதாக இருக்கவேண்டும்!" – *EGW, 6SDABC, p 1095.*

# கலந்துரையாடக் கேள்விகள்

1 *"ரோமர் 7:25இல் அப்போஸ்தலர் இப்படியாக எழுதுகிறார்: 'என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலேயோ பாவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன்.' (நம்பிக்கையுள்ள) ஒருவர் ஒரே சமயத்தில் தேவனுடைய பிரமாணத்திற்கும் பாவப்பிரமாணத்திற்கும் ஊழியஞ்செய்கிறார். நீதிமானாக்கப்பட்ட பிறகும் ஒரு பாவியாக இருக்கிறார். 'என் மனது தேவனுடைய பிரமாணத்திற்கு ஊழியஞ்செய்கிறது' என்றோ, 'என் மாம்சம் பாவப்பிரமாணத்திற்கு ஊழியஞ்செய் கிறது' என்றோ அவர் சொல்லவில்லை; மாறா, 'நானே' என்று சொல்கிறார். அதாவது, ஒரே மனிதன்தான் இந்த இரண்டுவிதமான ஊழியத்தில் ஈடுபடுகிறான். எனவே, தேவனுடைய பிரமாணத்திற்கு ஊழியஞ்செய்வதற்காக தேவனுக்கு நன்றி கூறுகிறார்; பாவப்பிரமாணத்திற்கு ஊழியஞ்செய்வதற்காக தேவனிடம் இரக்கம் வேண்டுகிறார். ஆனால் மாம்சத்திற்குரிய (மனமாறாத) ஒருவர் தேவனுடைய பிரமா ணத்திற்கு ஊழியஞ்செய்வதாக யாரும் சொல்லமுடியாது. பரிசுத்தவான்கள் நீதிமான் களாக இருந்தாலும் அவர்கள் பாவிகள்தாம். கிறிஸ்துவை அவர்கள் விசுவாசிப்பதால் அவருடைய நீதி அவர்களை மூடுகிறது; அவர்கள் நீதிமான்களாக எண்ணப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றாததால் அவர்கள் பாவிகள்; பாவ இச்சை உள்ளவர்கள். சிகிச்சைபெறும் நோயாளிகளைப்போல இருக்கிறார்கள். தாங் கள் வியாதிப்பட்டிருந்தாலும், தங்களுக்கு சுகம் கிடைக்குமென நம்புகிறார்கள். மீண் டும் ஆரோக்கியமடைவார்கள். தாங்கள் சுகமாக இருப்பதாகச் சொல்கிறவர்கள்தாம் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்; மிகக்கொடுமையாக வியாதிப்படுவார்கள். (முதலாம் நோயைவிட)." - மார்ட்டின் லூதர். லூதர் சொல்வது சரிதானா? விவாதியுங்கள்.*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: **போதகர் சாத்ராக் சாமுவேல்,**

**டாக்டர் ஏ. ஜான்சன்**

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

**Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*